# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.182/2023

### அ.சா. 5 (LW 5 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அன்பு செல்வி | **தொழில்** | |
| **த/க பெயர்** | இளங்கோ | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **07.10.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 9 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடியிருந்து கோபால்பட்டி வேம்பார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் 7 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.4 இளங்கோ எனது கணவர் ஆவார். வழக்கில் இறந்த போன கண்ணனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளில் ஒருவரான முருகனை(4 ஆம் எதிரி) மட்டும் தெரியும். அந்த முருகன் எனது கணவர் இளங்கோவிடம் கடன் கேட்டார். என் கணவர் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். எதிரிகளை எப்படி தெரியும் என்று விசாரித்தார்கள். பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக தான் தெரியும் வேறு எதுவும் தெரியாது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரி தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.10.07 06:20:30 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.